# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.

**முன்னிலை: திருமதி.பி.கே.தமயந்தி,எம்,ஏ.,பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

**2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் 8 நாள் திங்கள்கிழமை**

**இ.ம.எண். 4/2023 in அ.வ.எண். 134/2022**

1. சரசு
2. முத்துலட்சுமி
3. சிவராஜ் . . . மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

1. தங்கம்
2. மோகன்ராஜ்
3. சார்பதிவாளர், எருமபட்டி SRO
4. மாவட்ட ஆட்சியர், நாமக்கல். . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என்முன்பு 19.12.2023 ம் தேதியில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணன், அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.வரனேஷ், அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தோன்றாதரப்பினராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## உத்தரவு

மனுதாரர்/வாதிதரப்பில், அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக கடந்த 14.07.2023 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்ட தாவாவை (dismissed for default) கோப்பிற்கு எடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9 r/w பிரிவு 151 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. <u>மனுதாரர்கள்/வாதிகள்தரப்பு பிரமாணப்பத்திரிக்கையின் சுருக்கம்:–</u>

மனுதாரர் அசல் தாவாவில் 1ம் வாதி. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம்கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது கடந்த 14.07.2023 தேதியில் படி செலுத்துவதற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. மனுதாரரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 14.07.2023 தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராகி படி செலுத்த இயலவில்லை என்றும், அழைத்தும் ஆஜரின்மையால் அசல் வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி மனுதாரரின் ஆஜரின்மை வேண்டுமென்றோ, விருப்பமாகவோ ஏற்பட்டதல்ல. மனுதாரருக்கு நல்ல கட்சி உள்ளது. ஆகவே அசல் வழக்கை மீண்டும் கோப்பிற்கு எடுக்க அனுமதியளித்து உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>1, 2 எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள்தரப்பு எதிர்மனுஉரையின் சுருக்கம்:–</u>

எதிர்மனுஉரையில் 24.11.2022 தேதியில் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப இந்நீதிமன்றத்தில் உத்தரவிடப்பட்டிருந்தது. வாதி, பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. 24.01.2023, 09.02.2023, 01.03.2023, 23.03.2023, 28.03.2023, 08.06.2023 ஆகிய தேதிகளில் வாய்ப்பு வழங்கப்பட்ட பின்பு படி செலுத்த தவறினால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்று Conditional Order போடப்பட்டபிறகு மனுதாரர்தரப்பில் படி செலுத்தப்படவில்லை. ஆகவே மனுதாரரின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது வழக்காவணங்களின் மூலம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. வாதிகள் மேலும் வழக்கை நடத்த தயாராக இல்லை என்றும், எதிர்மனுதாரர்களை கஷ்டப்படுத்துவதற்காக இதுபோன்று வழக்கு

தாக்கல் செய்துள்ளதாகவும், 14.07.2023 தேதியில் மனுதாரர் உடல்நிலை சரியில்லை என்பதால் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் பிரமாணப்பத்திரத்தில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், ஆகவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுஉரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.**. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**4.** இம்மனுவில் இந்நீதிமன்றம் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால் மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல்செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**5.** வழக்காவணங்களை ஆராய்ந்து பார்க்கும்போது, அசல் வழக்கானது கடந்த 24.11.2022 தேதியில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள்தரப்பில் உயில்சாசனம் இல்லாநிலையது என்று விளம்புகை செய்யக்கோரியும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தாவாவில் எதிர்மனுதாரர்களுக்கு சம்மன் அனுப்ப படி செலுத்த உத்தரவிடப்பட்டும், மனுதாரர் படி செலுத்தாமலும், மனுதாரரை அழைத்தும் ஆஜரின்மையால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. பிரமாணப்பத்திரத்தில் மனுதாரருக்கு 14.07.2023 தேதியில் உடல்நிலை சரியில்லை என்று குறிப்பிட்டுள்ளபோதும், ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இருந்தபோதும் இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும், தரப்பினர்களுக்கு அவர்களது வழக்கை எடுத்துரைக்க உரிய வாய்ப்புகள்

வழங்கப்பட வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இயற்கை நீதிக்கொள்கையின் அடிப்படையிலும், மனுதாரர்களின் மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்களின் மனுவை அனுமதித்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. செலவுத்தொகை இல்லை.

என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, இன்று திறந்த நீதிமன்றத்தில் 2024ம் வருடம் ஜனவரி மாதம் 08ம் நாள் அவையறிய உத்தரவு பகரப்பட்டது.

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.01.08 20:01:51 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**

1. **<u>மனுதாரர்கள்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u>**

**இல்லை.**

2. **<u>எதிர்மனுதாரர்கள்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

**இல்லை.**

P K DHAMAYANTHI

Digitally signed by P K DHAMAYANTHI
Date: 2024.01.08 20:01:59 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சேந்தமங்கலம்.**